ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය } எனது இல. } My No. HRC/Suo/Motu/11/20 | ඔබේ අංකය } உமது இல. } Your No. | දිනය } திகதி } Date 2020.06.11

செயலாளர், பொது நிருவாக அமைச்சு

மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு

**அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்து கொவிட் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தல்**

கொவிட் 19 தொற்று நோய் காரணமாக முழு நாடும் சிக்கலுக்குள்ளாகியிருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்காக நிதியமொன்றை ஏற்படுத்தி அதற்குப் பங்களிப்புச் செலுத்த முடியுமானவர்களுக்கு அன்பளிப்புச் செய்வதற்கு அரசாங்கம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

இதற்கு இணையான வகையில் அரச ஊழியர்களின் விருப்பத்தின்பேரில் சம்பளத்தை அல்லது சம்பளத்தில் அரைவாசியை அல்லது ஒரு நாள் சம்பளத்தை அன்பளிப்புச் செய்யுமாறு சனாதிபதியின் செயலாளரால் அந்த ஊழியர்களின் நிறுவனத் தலைவர்களூடாக அனைத்து அரச ஊழியர்களுக்கும் 2020.05.05 ஆம் திகதி தனிப்பட்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளுக்கமைய இந்த நாட்களில் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் ஊழியர்களிடமிருந்து இந்த பண அன்பளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்தாவணங்களை அனுப்புவதுடன், அந்த எழுத்தாவணங்களுக்கமைய சம்பளத்தை அல்லது அதில் ஒரு பகுதியை கழித்து அதனை அனுப்புதல் கட்டாயமான விடயமொன்றாகியுள்ளதாகவும், அதற்காக அரச ஊழியர்களுக்கு மறைமுகமாக மற்றும் நேரடியாக அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது.

உதாரணமாக வட மாகாண சபை ஆளுநரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய இதற்காக மே மாதத்தின் ஒரு நாள் சம்பளத்தைக் கழித்துக்கொள்வதற்கு வட மாகாண கல்வி அமைச்சின் ஊழியர்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்துவதற்கு படிவமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்தப் படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பாத பாடசாலைகளுக்கு மே மாதத்திற்கான சம்பளத் தாளை (Pay sheet) அனுப்புவதில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பளம் அல்லது அதில் ஒரு பகுதியைக் கழித்துக்கொள்வதற்கான விருப்பத்தை தெரிவிக்காத ஊழியர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரல் மற்றும் சம்பளத்தில் கழித்துக்கொள்வதற்கு விருப்பத்தை தெரிவித்த அனைத்து ஊழியர்களினதும் பெயர்ப் பட்டியலொன்றைப் பேணிவருவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையின் காரணமாக இதற்காக விருப்பத்தை தெரிவிக்காத ஊழியர்களுக்கு பாரபட்சம் காட்டுவதற்கான வாய்ப்பு இருப்பதாக அவதானிக்கப்படுவதுடன் அது அரசியலமைப்புச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரையை மீறும் செயலாகும்.

அதற்கமைய, ஊழியர்களின் விருப்பத்தின்பேரில் சம்பளத்தை அல்லது அதன் ஒரு பகுதியை அன்பளிப்புச் செய்வதற்காக நிறுவனத் தலைவர்களின் ஊடாக அறிவித்தலானது ஏற்கனவே பிரச்சினைக்குரிய விடயமொன்றாகியிருப்பதனால் அந்த விடயத்தை நேரடியாக ஊழியர்களுக்கு அறிவித்து அவர்களது சுய விருப்பத்தின்பேரில் இந்த அன்பளிப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்கின்றது.

ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrcsl@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

எனவே, இந்த விடயம் தொடர்பாக தங்களது கவனத்தைச் செலுத்தி அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்து கொவிட் நிதியத்திற்கு அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொள்ளும்போது அந்த ஊழியர்களின் சுய விருப்பத்தின்பேரில் மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், வேறு எந்த வகையான அழுத்தங்களும் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் அதிகாரங்களுக்கமையவே மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தல் விடுக்கப்படுக்கப்படுகின்றதென்ற விடயத்தையும் இங்கு கவனத்திற்கொள்ளவும்.

**செயலாளர்,**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**பிரதிகள்:**

1. கௌரவ அமைச்சர், பொது நிருவாக அமைச்சு.
2. மாகாண சபைகளின் கௌரவ முதலமைச்சர்கள்
3. கௌரவ சனாதிபதியின் செயலாளர்